# DEPOSITION OF WITNESS

**Crl.Misc.39**
**(CHAPTER XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM**

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பெரியசாமி | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | சின்னப்பன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 14.3.2024.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் எடப்பாடி வெள்ளரிவெள்ளி கிராமத்தில் கல்லுகடையில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன சின்னுசாமி என்னுடைய பெரியம்மா மகன் ஆவார். ஆஜர் 1வது எதிரி என்னுடைய அண்ணன் மகன் சந்திரசேகர். மற்ற எதிரிகளை எனக்குத் தெரியாது. சந்திரசேகர் தறி ஓட்டி வந்தார். அவர் காளிப்பட்டியில் சின்னுசாமியின் வீட்டிலேயே குடியிருந்து வந்தார்.

சின்னுசாமியின் 2வது மகன் ரமேஷ். சின்னுசாமி நியூஸ் பேப்பர் வியாபாரம் செய்து வந்தார். சின்னுசாமிக்கும் ஆஜர் 1வது எதிரிக்கும் இடையில் சொத்து சம்மந்தமாக அவ்வப்போது தகராறு ஏற்படும். மாதம் ஒரு முறை நான் சின்னுசாமியை பார்க்க செல்லும்போது சொத்து சம்மந்தமாக தனது மூத்த மகனான 1வது எதிரி தகராறு செய்து வருவதாக கூறினார். கொஞ்ச நாள் கழித்து தற்போதிருந்து 5,6 வருடத்திற்கு முன்னர் சின்னுசாமி இறந்துவிட்டதாக தொலைபேசி மூலம் சின்னுசாமியின் 2வது மகன் ரமேஷ் கூறினார். நான் சின்னுசாமியின் வீட்டிற்கு வந்து பார்த்தேன். சின்னுசாமி ரத்தகாயத்துடன் கிடந்தார். அவரை யாரோ அடித்து கொன்றுவிட்டதாக பேசிக்கொண்டார்கள். தென்னை மட்டை வெட்ட வந்தவர் 2,3 பேர் வந்தார்கள் என்றும், வீட்டிற்குள் சென்றுவிட்டு வெளியே வந்தார்கள் என்றும் சொன்னார்கள். பிறகு உள்ளே சென்று பார்த்தபோது சின்னுசாமி இறந்துகிடந்ததாக சொன்னார்கள். சம்பவ இடத்திற்கு போலிசார் வந்து விசாரித்தார்கள். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை;</u>

என் வீட்டிலிருந்து இறந்துபோன சின்னுசாமியின் வீடு எவ்வளவு தூரம் என்றால் 20 கிலோமீட்டர் இருக்கும். அங்கிருந்து வந்தால் பேருந்திலோ அல்லது இருசக்கர வாகனத்திலோ வரமுடியும் என்றால் சரி. நான் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் இரவு 8.00 மணிக்கு சென்றேன். சின்னுசாமி இறந்துவிட்டதாக

எத்தனை மணிக்கு எனக்கு தகவல் வந்தது என்றால் 6.00 மணிக்கு தகவல் வந்தது. சின்னுசாமி, சந்திரசேகர் மற்றும் ரமேஷ் ஆகியோர் 2012ம் வருடம் சொத்தை பாகம் செய்து கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எத்தனை மணிக்கு போலிசார் வந்தார்கள் என்றால் நான் 8 மணிக்கு சென்றேன், அதற்கு முன்னரே காவலர்கள் வந்துவிட்டார்கள். சின்னுசாமிக்கும் 1வது எதிரிக்கும் சொத்து தகராறு எதுவும் இல்லை என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொன்னுசாமி என்பவரை நான் பார்த்து பேசவில்லை என்றால் சரி.

2 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பில் 1வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை தழுவிக்கொள்ளப்பட்டது.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.